(ஆ) இவ்வேலை நடப்பு பாசன அடைப்பு காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: இந்த வீரசோழனாற்றில் 79/12 என்ற இடத்தில் ரெகுலேட்டர் கட்டுவதால் எவ்வளவு கிராமங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்? அதனால் பயன் அடையக் கூடிய விவசாயிகள் எவ்வளவு பேர்கள்? அதனால் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஏற்கனவே இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட வேலை துவங்கப்படாமல் உள்ளதா என்ற கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மற்ற விளக்கங்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: வீரசோழனாற்றில் இன்னும் பக்கத்தில் ஏதாவது ரெகுலேட்டர் கட்ட திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஆய்வில் இல்லை.

கெலவரப்பள்ளி அணைத் திட்டம்.

* **வினா எண் 55—திரு. மு. ப. முனுசாமி:** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலவரப்பள்ளி அணைத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்டத்தில் 99 சதவீதம் மண் அணை அமைக்கும் வேலைகளும் 73 சதவீதம் கல் கட்டிட அணை அமைக்கும் வேலைகளும் முடிக்கப் பட்டுள்ளன. குறுக்கு கல் கட்டிடம் கட்டும் பணி 27 சதவீதம் முடிக்கப் பட்டு விட்டதுடன் 14 கி.மீ. இடப்புற கால்வாய் மற்றும் 9.5 கி.மீ. வலப்புற கால்வாய் தோண்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இதற்கிடையில் இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அரசு வெளியிட்ட அறிக்கையினை எதிர்த்து சில நிலச் சுவான்தார்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். அம்மனுவின் பேரில் உயர்நீதி மன்றம் இத்திட்டத்தின் பணிகளுக்கு தடுப்பு உத்திரவு பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக இத்திட்டத்திற்கான பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

1980 ஜூலை 26]

திரு. மு. ப. முனுசாமி : ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும்போது அந்தத் திட்டத்தின் கீழ் வரக்கூடிய நிலச்சுவாந்தார்களை அவர்கள் யார் யார் என்று நிர்ணயித்து அவர்கள் ஒப்புதலைப் பெற்றுத்தான் திட்டத்தை ஆரம்பிக்கிறோம். அத்திட்டத்தை காலதாமதப்படுத்த சில நிலச்சுவாந்தார்கள் பெரும்பான்மை மக்கள் முன்னேற்றம் அடையக் கூடிய திட்டத்தை நிறுத்தி வைக்க உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்திற்கு நஷ்டயீட்டுத் தொகை சரியாக நிர்ணயிக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி உயர்நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். இதனால் பொது மக்கள் பயன் அடைவதை அவர்கள் நிறுத்தி வைக்கிறார்கள். ஆகவே பொது மக்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பொது மக்களுக்கு இருக்கிற கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம்.

*கு.கா.வி. எண் 44—திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது 'தன்னிறைவு' திட்டத்தில் எத்தனை ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன ?

(ஆ) எந்த தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது ?

(இ) மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் தொகுதியைச் சார்ந்த மணிகண்டம் ஒன்றியம் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 1979-80 ஆம் ஆண்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களும், 1980-81-ல் 100 ஊராட்சி ஒன்றியங்களும் தன்னிறைவு திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுவாக ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டம் செயல்படுகின்ற வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய நிலையில் உள்ள வட்டாரங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) மணிகண்டம் ஒன்றியம் இந்நிதியாண்டில் சேர்க்கப்படவில்லை.